**இலங்கை பௌத்த, பாலி பல்கலைக்கழகம்**

------------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் நான் பெற்றுக் கொண்ட தகவல்களுக்கும் மற்றும் எனக்கு அளிக்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய, இலங்கை பௌத்த, பாலி பல்கலைக்கழகம் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கு உரிய கணக்கேடுகளை முறையாகப் பேணியுள்ளது எனவும், இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களால் நிதிக் கூற்றுக்களில் விளையும் தாக்கத்தைத் தவிர இலங்கை பௌத்த, பாலி பல்கலைக் கழகத்தின் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலைவரத்தினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு விளைவுகளையும் காசுப்பாய்ச்சலையும் உண்மையாகவும் நேர்மையாகவும் காட்டும் வண்ணம் நிதிசார் கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டுள்ளன என்று நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.2. நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) முற்றாகப் பெறுமானத்தேய்விடப்பட்டதாகக் கணக்குகளில் காண்பிக்கப்பட்ட போதிலும் தொடர்ந்து பயன்பாட்டிற்காக எடுத்துக்கொள்ளப்படும் ரூபா 33,608,706 கிரயமான நிலையான சொத்துக்கள் மீள்பெறுமதியிடப்பட்டு கணக்குகளில் பதியப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வெளிச் செயற்திட்ட வருமானத்தில் இருந்து கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 875,935 பெறுமதியான உபகரணங்களின் பெறுமதி காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்படுகையில் கைவிடப்பட்டிருந்தது.

(ஆ) கிளையின் இறுதி இருப்புப் பெறுமதிக்கும் கூற்றின் படியான இருப்புப் பெறுமதிக்கும் இடையே முறையே ரூபா 215,928 ஆலும் ரூபா 425,225 குறைவாகவும் ஒப்பந்தத்தில் பிடித்து வைத்தல்கள் ரூபா 75,389 அதிகரித்தும் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தன.

**1.2.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்**

---

03 விடயங்களுக்கு உரிய கணக்குகளுக்கும் பட்டோலைகளுக்கும் இடையே ரூபா 26,173 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டதுடன் இதற்கான காரணங்களை அறிந்து சீராக்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**1.2.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) பல வருட காலமாக முன்கொண்டுவரப்படும் ரூபா 41,568 தொகையான செலுத்தப்படாத சம்பளங்கள் மீளாய்வாண்டின் போதும் தீர்க்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தற்போது சேவையில் இல்லாத உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 58,750 தொகையான கடன் மீதிகள் பிணையாளிகளிடம் இருந்தோ அல்லது சட்டநடவடிக்கைகளின் மூலமோ அறவிடப்பட்டு தீர்க்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் இறுதியில் ஒப்பந்தங்கள் மற்றும் வழங்கல்களுக்கான பிடித்து வைத்தல்களின் பெறுமதி ரூபா 12,329,892 ஆனதுடன் இதில் 5 ஆண்டுகளுக்கு மேல் பழமையவாய்ந்த மீதிகளின் பெறுமதி ரூபா 7,911,317 ஆகக் காணப்பட்டது.

**1.2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

---

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
| --- | --- |
| (அ) 1981 இன் 74 ஆம் இலக்க இலங்கை பௌத்த, பாலி பல்கலைக்கழக அதிகாரச்சட்டத்தின் vii ஆம் பகுதியின் 32(ஈ)பிரிவு | சுய நிதியீட்டுப் பாடநெறி வருமானம் பல்கலைக்கழக நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிராததுடன் இதற்கு மேலதிகமாக அவை பயன்படுத்தப்பட்டிருந்தன. |
| (ஆ) 1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடைக் கொடுப்பனவு அதிகாரச்சட்டம் | பல்கலைக்கழக ஊழியர்களுக்காக பணிக்கொடைக் கொடுப்பனவிற்கான வருடாந்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. |
| (இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணம் | |
| (i) 371(2)(ஆ) மற்றும் (இ) பிரிவு | (அ) ஒரு தடவையில் துணைக்கட்டுநிதி வழங்கப்பட வேண்டிய ரூபா 20,000 தொகையான ஆகக் கூடிய எல்லைக்கு மேலாக பல்கலைக்கழகத் தினால் ரூபா 21,000 முதல் ரூபா 77,200 வரை முற்பணம் வழங்கப்பட்டிருந்த துடன் அவ் எல்லை மீறப்பட்டு ஆண்டின் போது 06 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 533,940 தொகையான முற்பணம் வழங்கப்பட்டிருந்தது. |
| | (ஆ) மீளாய்வாண்டின் போது 05 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட ரூபா 78,527 தொகையான |

முற்பணத்தொகையில் இருந்து உரிய செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டு முற்பணம் தீர்த்து வைக்கப்பட்டிருக்க வில்லை. இவ்வாறே உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்ட ஒரு குறித்த பணிக்கான கட்டுநிதியைத் தீர்ப்பதற்கு முன்னர் மேலும் ஓர் கட்டுநிதியை வழங்கிய சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது கண்டறியப்பட்டன.

(இ) பல்கலைக்கழகத்தினால் நிறைவேற்றுத்தரமல்லாத 22 உத்தியோகத்தர்களுக்கு ஆண்டின் போது ரூபா 598,665 தொகையான முற்பணம் வழங்கப்பட்டிருந்தது.

| | | |
|---|---|---|
| (ii) | 571 ஆம் பிரிவு | ரூபா 20,000 கூட்டுத்தொகையான கேள்வி வைப்புக்கள் மீளச் செலுத்தப்படுவதற்கோ அல்லது அரசாங் வருமானத்திற்கு செலவு வைக்கப்படுவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | 756 ஆம் பிரிவு | நிலையான சொத்துக்கள் மெய்மையாய்வு செய்யப்பட்டு மீதி உறுதிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. |

| | | |
|---|---|---|
| (ஈ) | பல்கலைக்கழக உயர் கல்வி நிறுவகத்திற்காகன தாபன விதிக்கோவை | |
| | (i) X ஆம் அத்தியாயத்தின் 1.6.1 ஆம் பிரிவு | விரிவுரையாளர்கள் லீவுகள் பெறுவது குறித்து அறிக்கையிடப்பட்டிராததுடன் லீவுப் பதிவேடும் பேணப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) X ஆம் அத்தியாயத்தின் II ஆம் பகுதியின் 33 ஆம் 34 ஆம் பிரிவுகள் | வெளிநாட்டிற்குச் சென்றிருந்த 16 விரிவுரையாளர்களில் 13 பேர் எவ்விதத்திலும் உடன்படிக்கை ஏற்படுத்தியிராததுடன் ஏனைய 3 பேர் ஏற்படுத்தியிருந்த உடன்படிக்கையும் பூர்த்தியற்றநிலையில் காணப்பட்டது. |
| | (iii) XX ஆம் அத்தியாயத்தின் 3.1 ஆம் பிரிவு | விரிவுரையாளர்கள் தமது வருகையைப் பதிவு செய்வதற்காக வரவுப் பதிவேட்டில் கைச்சாத்திட்டிருக்கவில்லை. இதன் காரணமாக சேவையை விட்டுவிலகிச் சென்ற விரிவுரையாளர்களுக்காகவும் சம்பளம் தயாரிக்கப்பட்டிருந்தது. |
| (உ) | 1990 ஒக்டோபர் 10 ஆம் திகதிய 41/90 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கை | வாகனங்களின் எரிபொருள் பயன்பாடு தொடர்பான ஆய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஊ) | 1994 யூன் 14 ஆம் திகதிய 95 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களச் சுற்றறிக்கை மற்றும் பாதீட்டுப் பணிப்பாளர் நாயகத்தின் பீடீ/ஜஎன்எஸ்/சீஎல்வீஎஸ் - ஏ/078 ஆம் இலக்க 2003 யூலை 18 ஆம் திகதிய கடிதம் | (அ) ஊழியர் சேமலாப நிதியத்திற்கும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கும் பங்களிப்புச் செலுத்துகையில் கல்விசார் படிப்பணம் கருத்திற் கொள்ளப்பட்டதன் காரணமாக 1997 ஆம் ஆண்டு முதல் 2010 ஆம் ஆண்டு வரை ரூபா 3,855,206 தொகை கூடுதலாகச் |

செலுத்தப்பட்டிருந்ததுடன் மேற்குறித்த கொடுப்பனவுகள் மீள அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2007 ஆம் ஆண்டின் போது ஓய்வுபெற்றுச் சென்றிருந்த ஓர் விரிவுரையாளருக்கு பணிக்கொடைக்கொடுப்பனவு வழங்கப்படுகையில் கல்விசார் கொடுப்பனவு கணக்கிடப்பட்டிருந்தமையால்ரூபா 132,291 தொகை மேலதிகமாகக் கணிப்பிடப்பட்டு செலுத்தப்பட்டிருந்தது.

### 1.2.5 போதிய அதிகாரத்தினால் ஆதாரப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

---

1984 நவம்பர் 24 ஆம் திகதிய பீஈ/1/116/6 ஆம் இலக்க திறைசேரியினால் வழங்கப்பட்டிருந்த கடிதத்தின் பிரகாரம், மருத்துவ உதவி நிதியத்திற்காக பல்கலைக்கழக நிதியத்தினால் மேற்கொள்ளப்படும் பங்களிப்பைக் குறைப்பதற்காக மருத்துவ உதவி நிதியம் தொடர்பாகக் கிடைக்கும் வட்டித் தொகைகள் மற்றும் ஏனைய முதலீட்டு வருமானப் பங்களிப்பைச் செலுத்துவதற்காகப் பயன்படுத்துவதற்கு ஆலோசனை தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது பெறப்பட்ட முதலீட்டு வருமானத் தொகையான ரூபா 384,942 கழிக்கப்படாது மொத்தப் பங்களிப்புத் தொகையான ரூபா 1,717,684 ஆன மொத்தப் பங்களிப்புத் தொகையும் மருத்துவ உதவி நிதியத்திற்குச் செலவு வைக்கப்பட்டிருந்தது.

### 1.2.6 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

---

வெளிவாரிச் செயற்திட்டப் பாடநெறிகள் 02 இற்காக ஏற்பாடுகளுக்கு மேலாக ரூபா 156,059 தொகை செலவிடப்பட்டிருந்தது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் மீளாய்வு

#### 2.1.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, 2010 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்காக பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகளின் நிதிசார் விளைவுகளானது மீண்டெழும் செலவிற்கான அரசாங்க மானியத்தைக் கணக்கில் எடுத்துக் கொள்வதற்கு முன்னர் ரூபா 125,338,149 பற்றாக்குறையாகியதுடன் முன்னைய ஆண்டிற்கான இதனோடொத்த பற்றாக்குறை ரூபா 111,391,478 ஆகக் காணப்பட்டமையால் பற்றாக்குறை அதிகரிப்பு ரூபா 13,946,671 ஆகக் காணப்பட்டது. மீண்டெழும் செலவிற்காக பெறப்பட்ட ரூபா 82,170,000 அரசாங்க மானியத்தின் காரணமாக மீளாய்வாண்டிற்கான பற்றாக்குறை ரூபா 43,168,149 ஆனதுடன் இதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 40,998,478 ஆனமையால் பற்றாக்குறையில் ரூபா 2,169,671 ஆன அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது.

### 2.2 செயற்பாடு மீளாய்வு

#### 2.2.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) குறிக்கோள்கள் எய்தப்படுதல்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) ஆய்வுகளை நடாத்துவதன் மூலம் அறிவை மேம்படுத்தி மாணவர் சமூகத்தை சமூகத்திற்கு விடுவிப்பது பல்கலைக்கழகத்தின் பிரதான செயற்பாடான போதிலும் மீளாய்வாண்டின் போது ஜீயுன் பௌத்த ஆராய்ச்சி வெளியீட்டு நிதியம் எவ்வித ஆராய்ச்சியும் வெளியீட்டு நடவடிக்கைகளுக்காகவும் பயன்படுத்தப்பட்டிராததுடன் அதன் மீளாய்வாண்டின் இறுதியிலான மீதி ரூபா 1,646,614 ஆகக் காணப்பட்டது.

(ii) பல்கலைக்கழகத்தினால் பேணப்பட்டு வரும் மஹோபாத்ய நிதியம் ஸ்தாபிக்கப்படுவதற்கு காரணியான சட்டமூல நிலை தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிராததுடன் மீளாய்வாண்டின்

இறுதியில் ரூபா 1,944,896 தொகையான மீதி நிலவியது. மீளாய்வாண்டின் போது வாயு உதவு தொகைக்காக ரூபா 191,646 தொகையும் ரூபா 1,236,847 தொகையம் செலவிட்டு கட்டிடத் தொகுதி திறப்பு விழாவிற்காக ரூபா 1,000,000 இந் நிதியத்தினால் செலவிடப்பட்டிருந்தது.

(iii) பல்கலைக்கழகம் ஸ்தாபிக்கப்பட்டதன் முக்கிய நோக்கம் இலங்கை மற்றும் வெளிநாடுகளில் பௌத்த சமயத்தைப் பரப்பி தர்ம நடவடிக்கைகளை போதிப்பதற்காக பௌத்த தர்ம மற்றும் ஒழுக்கம் தொடர்பான ஸாஸ்திரங்களை பயிற்றுவித்தலாகும். 1984 முதல் 2010 வரையான காலப்பகுதியின் போது முதுமாணி, முதுகலைமாணி, கலைமாணி பட்டம், டிப்ளோமா ஆகிய பரீட்கைகளில் சித்தியெய்திய எண்ணிக்கை 4,996 ஆகும்.

(ஆ) மாணவர் ஆட்சேர்ப்பு

--------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) மீளாய்வாண்டின் போதும் முன்னைய ஐந்து ஆண்டுகளின் போதும் சாதாரண பட்டத்திற்காக உள்ளக மாணவர்களாக கோரிய மற்றும் ஆட்சேர்க்கப்பட்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மாணவர்களின் எண்ணிக்கை தொடர்பான குறிப்பு ஒன்று பின்வருமாறாகும்.

| **ஆண்டு** | **கோரப்பட்ட எண்ணிக்கை** | | **ஆட்சேர்க்கப்பட்ட எண்ணிக்கை** | |
|---|---|---|---|---|
| 2006 | 362 | 62 | 110 | 62 |
| 2007 | 348 | 42 | 102 | 42 |
| 2008 | 293 | 61 | 109 | 61 |
| 2009 | 196 | 74 | 109 | 74 |
| 2010 | 353 | 45 | 109 | 45 |

2004 ஆம் ஆண்டு முதல் ரூபா 512 மில்லியன் செலவிட்டு சகல வசதிகளுடன் நவீனமயமாக்கப்பட்ட கட்டிடம் உள்ளடங்கலாக உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டிருந்த போதிலும் இதற்கு

ஒப்பாக கூடிய மாணவர்களின் எண்ணிக்கை ஆட்சேர்ப்பு தொடர்பான கவனம் கோரப்பட்டிருக்கவில்லை.

(iii) மீளாய்வாண்டின் போது கல்வி நடவடிக்கைகளுக்காக 544 மாணவர்களுக்காக செலவிடப்பட்ட மொத்த மீண்டெழும் செலவினம் ரூபா 142,049,552 ஆனதுடன் முன்னைய ஆண்டின் போது 546 மாணவர்களுக்காக செலவிடப்பட்ட மொத்த மீண்டெழும் செலவினம் ரூபா 131,868,318 ஆகக் காணப்பட்டது. மீளாய்வாண்டின் போது ரூபா 261,120 தொகையான தலா ஒரு மாணவனுக்கான கிரயம் முன்னைய ஆண்டின் ரூபா 241,517 ஆன தலா ஒரு மாணவனுக்கான கிரயத்துடன் ஒப்பிடுகையில் 8.11% ஆல் அதிகரித்திருந்தது.

(இ) கல்விசார் செயலாற்றல்

-----------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) இலங்கை பௌத்த பாலி பல்கலைக்கழகத்தின் மொழிப் பீடத்தினதும் பௌத்த கல்விப் பீடத்தினதும் 2010 ஆம் கல்வி ஆண்டின் நேரஅட்டவணைப்படி ஒரு பாடத்திற்காக வழமையாக 30 விரிவுரைகள் நடாத்தப்பட வேண்டிய போதிலும் 56 பாடங்களுக்காக 1,680 பாடங்களில் 789 பாடங்கள் மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தன.

(ii) பரீட்சைக்கு தோற்றும் தகமையாக விரிவுரைகளில் கலந்துகொள்ளும் கட்டாய சதவீதத்தைக் கருத்திற்கொள்ளாத காரணத்தினால் விரிவுரைகளுக்காக மாணவர்களிடையே மிகவும் நலிவான மட்டத்தில் நிலவியதுடன் விரிவுரைகளுக்கு மாணவர்கள் கலந்து கொள்ளாததன் காரணமாக 41 பாடங்களுக்கு உரித்தான 144 விரிவுரைகள் நடாத்தப்பட்டிருக்கவில்லை. நடாத்தப்பட்ட 290 விரிவுரைகளில் மாணவர்களின் பங்கேற்பு 50% இனைப் பார்க்கிலும் குறைவாகக் காணப்பட்ட சந்தர்ப்பங்கள் 230 ஆகக் காணப்பட்டது.

(iii) மாணவர்கள் ஆட்சேர்க்கப்படாமையால் வெளி விரிவுரையாளர்கள் விரிவுரைகளை நடாத்தியிராத போதிலும் நடாத்தப்பட்டிராத 60 விரிவுரைகளுக்காக ரூபா 60,000 தொகை கல்வியாண்டின் போது செலுத்தப்பட்டிருந்தது.

(iv) ஒவ்வொரு கல்வியாண்டின் விரிவுரையாளர்களினால் ஒரு கிழமை நடாத்தப்படும் விரிவுரை மணித்தியாலங்கள் ஆய்வு செய்யப்படுகையில் நிரந்தர விரிவுரையாளர்களுக்கு ஒப்பீடாக தற்காலிகமான மற்றும் பயிலுனர் விரிவுரையாளர்களினால் கூடிய நேரகாலம் விரிவுரைகள் நடாத்தப்பட்டிருந்ததுடன் இதற்கு காரணமான விடயங்கள் விளக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 முகாமைத்துவ திறமையீனங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 1992 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்ட அபிவிருத்தி நிதியம் எந்த நோக்கத்திற்காக ஈடுபடுத்தப்பட வேண்டும் என நியதிகள் தீர்மானிக்கப்பட்டிராததுடன் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இதன் மீதி ரூபா 510,293 ஆகக் காணப்பட்டது. நிதியத்தில் இருந்து 2002 ஆம் ஆண்டு முதல் சிற்றண்டிச்சாலைக்கு ரூபா 99,505 செலவில் எரி வாயு வழங்குதல் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) பல்கலைக்கழகத்தில் தற்போது அனுபவிக்கும் மாகாணத்தின் மாகாண சபையின் விகசாய, காணி, விலங்கின உற்பத்தி மற்றும் சுகாதார, நீர்ப்பாசன மற்றும் போக்குவரத்து அலுவல்கள் அமைச்சிடம் இருந்த 5 ஏக்கர்கள் 0.27 பேர்ச் காணி 2002 திசெம்பர் 05 ஆம் திகதி பல்கலைக்கழகத்திற்குக் கையளிக்கப்படுகையில் சமர்ப்பிக்கப்பட்ட நிபந்தனைகளில் இக் காணி குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்ற நிபந்தனை பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 வேறு அரச நிறுவகங்களிடம் இருந்து பெறப்பட்ட வளங்கள்

பௌத்த சாசன அமைச்சிற்கும் உயர் கல்வி அமைச்சிற்கும் உரித்தான இரு மோட்டார் வாகனங்கள் பல்கலைக்கழகத்தினால் பயன்படுத்தப்பட்ட போதிலும் அவை சட்டபூர்வமாக கையேற்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.4 விளைவற்றதும் குறைவான பயன்பாடுடையதுமான சொத்துக்கள்**

ரூபா 28 மில்லியன் (பெறுமதி சேர் வரி தவிர்ந்த) செலவில் முழுமையாக்கப்பட்ட கேட்போர் கூடம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும் இது ஆய்விற்காக எதிர்வுகூறல் திட்டங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிராததுடன் மீளாய்வாண்டின் போதும் பயனுள்ள செயற்பாட்டிற்கு ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

**2.2.5 பதவியணிக் கிரயம்**

மீளாய்வாண்டின் இறுதியில் பல்கலைக்கழகப் பதவியணி, 15 கல்விசாராதவர்களையும் 04 கல்வி சார்ந்தவர்களையுமாக 19 வெற்றிடங்கள் நிலவின.

**3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் தொடர்பான குறைபாடுகள் அவ்வப்போது பல்கலைக்கழகத்தின் வணக்கத்திற்குரிய மஹோபாத்தியாயரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) நிலையான சொத்துக்கள்
(ஆ) நூலக முகாமைத்துவம்
(இ) நிர்மாணிப்புகள்
(ஈ) உள்ளகக் கட்டுப்பாடு
(உ) மனிதவள முகாமைத்துவம்
(ஊ) வெளிச் செயற்திட்டங்களுக்கு உரித்தான கணக்குப் பதிவு
(எ) தனிப்பட்ட கோவைகளைப் பேணல்